**அ.வ. எண்**: 14/2016 **நாள்**: 05.08.2025

நீலகிரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் 05 ம் நாள் **பிரதிவாதி சாந்தி DW**-1 என்பவரின் சாட்சியம் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.ராமலட்சுமி, உதவியாளர் நிலை 3 என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **சாந்தி** | தொழில் | : |
| கணவர் பெயர் | : அந்தோனி | சமயம் | : |
| கிராமம் | : | வயது | : 67 |
| தாலூக்கா | : | சாதி | : |

---

**முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கில் **பிரதிவாதியாவேன்**. இன்று, நான் முதல் விசாரணை சாட்சியத்தினை நிருபண ஆணையுறுதி ஆவணமாக தாக்கல் செய்கிறேன். ஆணையுறுதி ஆவணத்தில் கண்டுள்ள சங்கதிகளைப் பார்த்து கேட்டு தெரிந்து கொண்டேன். அவைகள் யாவும் சரியானவை என்று நான் உறுதி கூறுகிறேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1. தேதி குறிப்பிடப்படாத பிரதிவாதி பெயருக்கு வழங்கப்பட்டுள்ள வீட்டு மனை ஒப்படைவு உத்தரவு நமூனாவில் ஒளி நகல் அசலுடன் ஒப்பிட்டு பார்த்து **பி.வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. பிரதிவாதி பெயரில் உள்ள சொத்து வரி ரசீதுகள் (4 எண்ணிக்கை) அசல் **பி.வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. பிரதிவாதி பெயரில் உள்ள மின் கட்டண ரசீதுகள் (3 எண்ணிக்கை) அசல் **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. 05.01.2016 தேதியிட்ட உதகை நகர மேற்கு காவல் நிலையம் வழங்கிய மனு எண் 4/2016 கொண்ட மனு ரசீது அசல் **பி.வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**(வேண்டுகோளின் பெயரில் கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்ய முதல் விசாரணை தொடர்ச்சிக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).**

LOGANATHAN PRAKASH

Digitally signed by LOGANATHAN PRAKASH
Date: 2025.08.05 20:22:13 +0530